DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 120 / 2022
Deposition of PW5 - திரு. குமார் - வனக்காவலர் - ஓய்வு (கு.வி)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2026.
2 ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ தினத்தன்று ரோந்து சென்ற 5 நபர்களில் நானும் ஒரு நபர் ஆவேன். சம்பவத்தன்று நானும் 4 பேரும் சேர்ந்து நேரம் சரியாக நினைவில் இல்லை சுமார் காலை 6.30 மணிக்கு ரோந்து சென்றோம். 5 பேரும் சேர்ந்து ஒரே பக்கம் தான் ரோந்து சென்றோம் என்றால் இல்லை ஆளுக்கு ஒரு பக்கம் பிரிந்து சென்றோம். நானும், வனக்காவலர் தங்கமணி, வனவர் ஆகிய மூவரும் ஒரு பக்கம் சென்றோம். மற்ற இருவர் வேறு பக்கம் சென்றார்கள். அலுவலகத்தில் இருந்து எங்களது இருசக்கர வாகனத்தில் தான் சென்றோம். நாங்கள் எதிரியை பார்க்கும் போது சாக்கு மூட்டையை ஒளித்து வைக்க முயற்ச்சித்தார்கள் .

2. நான் பார்க்கும் போது சாக்குமூட்டையானது சிவக்குமாரின் தலையில் இருந்தது. உடனே சந்தேகப்பட்ட நாங்கள் எதிரிகள் இருவரையும் எங்களது அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம். எங்களது அலுவலகத்தில் வைத்து தான் எதிரிகளை எங்களது அதிகாரி விசாரணை செய்தார். அந்த வழக்கு தொடர்பான ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் குற்ற அறிக்கை போன்ற அனைத்தும் எங்களது அலுவலகத்தில் வைத்து தான் விசாரிக்கப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன விபரம் சொன்னார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படும் போது நான் அந்த இடத்தில் இல்லை. சம்பவயிடத்தின் பக்கத்தில் தனியாருக்கு நிலங்கள் உள்ளது விவசாயம் நடக்கவில்லை தரிசு நிலங்களாக இருந்தது.

3. சம்பவயிடத்திற்கு பக்கத்தில் தனிநபர்களுக்கு விவசாய நிலம் உள்ளது என்றும் அந்த விவசாய நிலங்களில் விளையும் வேளாண் பயிர்களை காட்டுப் பன்றிகள் சேதப்படுத்துவது வழக்கம் என்றால் சரியல்ல. அந்த பகுதியில் உள்ள விவசாயிகள் அவர்களின் வேளாண் பயிர்களை காட்டுப்பன்றிகள் சேதப்படுத்துவதாகவும் அதற்கு முன் எச்சரிக்கையாக தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும்படி எங்களது அலுவலகத்தில் கோரிக்கை வைத்தார்களா

என்றால் அங்கு விவசாய நிலமே இல்லை. அங்கு விவசாய நிலங்கள் உள்ளது என்றும் நான் பொய்யாக விவசாய நிலங்கள் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. அந்த விவசாயிகள் பயிர்களை பாதுகாக்க வேண்டி வைத்த வெடிபொருளில் சிக்கி அந்த பன்றி இறந்து இருப்பதாகவும் அதற்கு யார் மீதேனும் வழக்கு போடவேண்டும் என்ற நோக்கில் எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தன்று மேக்கிழார்பட்டி – ஆண்டிபட்டி மெயின் ரோட்டில் எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது வழிமறித்து அவர்களை விசாரிக்கும் போது ஒருவர் ஏத்தக் கோவிலை சேர்ந்தவர் என்றும் மற்றொருவர் பாலக்கோம்பையை சேர்ந்தவர் என்றும் இருவர் மீதும் இந்த வழக்கினை போட்டால் பொருத்தமாக இருக்கும் என்று கருதி இந்த வழக்கினை எதிரிகள் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்திற்கு , சொன்ன நேரத்தில் ரோந்து செல்லவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து சாக்குபை ஏதும் கைப்பற்றவில்லை என்றும் , எதிரிகளிடம் இருந்து என் அதிகாரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றும் , என் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

( 2ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.)

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.12 17:51:14 +0530

Judicial Magistrate,
Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 120 / 2022
Deposition of PW4 - திரு. ராஜசேகர் - வனவர் (கு.வி)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2026.
2 ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ தினத்தன்று ரோந்து சென்ற 5 நபர்களில் நானும் ஒரு நபர் ஆவேன். சம்பவத்தன்று நானும் 4 பேரும் சேர்ந்து சுமார் காலை 7.00 மணிக்கு ரோந்து சென்றோம். 5 பேரும் சேர்ந்து ஒரே பக்கம் தான் ரோந்து சென்றோம். ரோந்து பணிக்கு நடந்து தான் சென்றோம். அனைவரும் சீருடையில் தான் சென்றோம். சம்பவம் நடந்த இடம் மண் ரோடு ஆகும் என்றால் எந்த ரோடும் இல்லை அது கரடுமுரடான இடம் தான். நாங்கள் எதிரியை பார்க்கும் போது சாக்கு மூட்டையை ஒளித்து வைக்க முயற்ச்சித்தார்கள் நாங்கள் போய் பிடித்துவிட்டோம். நாங்கள் எதிரிகள் வைத்திருந்த சாக்குமூட்டையை பார்க்கும் போது தலையிலோ அல்லது வண்டியிலோ இல்லை.

2. எதிரியை பார்த்தவுடன் சம்பவியிடத்தில் வைத்து எங்கள் அதிகாரியான வனச்சரக அலுவலர் விசாரித்து அங்கேயே வாக்குமூலம் பதிவு செய்தார். கார்பன் சீட் மற்றும் வெள்ளைப் பேப்பர் அனைத்தும் அங்கேயே வைத்து எழுதி வந்தோம். எதிரிகளை பிடித்து விசாரித்து வாக்குமூலம் வாங்கி அதை பதிவு செய்தவரையில் மொத்தம் சுமார் 1 மணி நேரம் ஆகியது. சம்பவயிடத்தில் அக்கம் பக்கம் தனிநபர்களின் விவசாய நிலங்கள் ஏதும் இல்லை. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காட்டு பன்றியை வெடி வைத்து கொன்று பிடித்ததாக சொல்லியுள்ள விபரத்திற்கு எதிரிகள் எங்கு வெடி மருந்து மற்றும் அதன் துணை பொருட்களை வாங்கினார்கள் என்ற விபரம் ஏதும் கேட்டுத் தெரிந்தாரா என்றால் கேட்டோம் ஆனால் எதிரிகள் அது பற்றி சொல்லவில்லை.

3. இரண்டு எதிரிகளில் முதல் எதிரி ஏத்தக் கோவிலை சேர்ந்தவர் என்றும் 2ம் எதிரி பாலக்கோம்பையை சேர்ந்தவர் என்றும் சொன்னால் சரிதான். மேற்படி இரு ஊர்களும் மலை அடிவாரத்தில் தான் இருக்கிறது என்றால் சரிதான். இதற்கு முன்பு இரண்டு எதிரிகளின் மீதும் இது போன்ற காட்டு பன்றிகளை வேட்டையாடிய முன் வழக்குள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான்

சொல்வது போல் எதிரிகள் பன்றிகளை வெடி வைத்து வேட்டையாட வேண்டும் என்றால் எங்களது அலுவலகத்திற்கு பின்னால் வரவேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர்கள் ஊருக்கு அருகே உள்ள மலைப்பகுதியிலேயே வேட்டையாடிக் கொள்ளலாம் என்று சொன்னால் சரியல்ல.

4. சம்பவயிடத்திற்கு பக்கத்தில் தனிநபர்களுக்கு விவசாய நிலம் உள்ளது என்றும் அந்த விவசாய நிலங்களில் விளையும் வேளாண் பயிர்களை காட்டுப் பன்றிகள் சேதப்படுத்துவது வழக்கம் என்றால் சரியல்ல. அந்த பகுதியில் உள்ள விவசாயிகள் அவர்களின் வேளாண் பயிர்களை காட்டுப்பன்றிகள் சேதப்படுத்துவதாகவும் அதற்கு முன் எச்சரிக்கையாக தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும்படி எங்களது அலுவலகத்தில் கோரிக்கை வைத்தார்களா என்றால் அங்கு விவசாய நிலமே இல்லை. அங்கு விவசாய நிலங்கள் உள்ளது என்றும் நான் பொய்யாக விவசாய நிலங்கள் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. அந்த விவசாயிகள் பயிற்களை பாதுகாக்க வேண்டி வைத்த வெடிபொருளில் சிக்கி அந்த பன்றி இறந்து இருப்பதாகவும் அதற்கு யார் மீதேனும் வழக்கு போடவேண்டும் என்ற நோக்கில் எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தன்று மேக்கிழார்பட்டி – ஆண்டிபட்டி மெயின் ரோட்டில் எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது வழிமறித்து அவர்களை விசாரிக்கும் போது ஒருவர் ஏத்தக் கோவிலை சேர்ந்தவர் என்றும் மற்றொருவர் பாலக்கோம்பையை சேர்ந்தவர் என்றும் இருவர் மீதும் இந்த வழக்கினை போட்டால் பொருத்தமாக இருக்கும் என்று கருதி இந்த வழக்கினை எதிரிகள் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்திற்கு , சொன்ன நேரத்தில் ரோந்து செல்லவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து சாக்குபை ஏதும் கைப்பற்றவில்லை என்றும் , எதிரிகளிடம் இருந்து என் அதிகாரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றும் , என் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
( 2ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.)

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.12 17:52:08 +0530

Judicial Magistrate,
Andipatti.